1979 ஏப்ரல் 26]

திரு. பொ. முனுசாமி : தலைவர் அவர்களே, அதைக் கட்டு வதற்கு எந்த அளவுக்குப் பணம் ஒதுக்கீடு செய்வார்கள்? அது எப்போது கட்டப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு முடிந்தவுடன் உடனடியாக அதற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதையெல்லாம் விவரமாகச் சொல்ல முடியும்.

கிருதுமால் நதித் திட்டம்.

*வினா எண். 839 திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வைகை திட்டத்தில் விரகனூர் ரெகுலேட்டரிலிருந்து பிரிந்து செல்லும் கிருதுமால் நதித்திட்டத்தை முதுகுளத்தூர், கடலாடி தொகுதிகள் பயன்பெறும் வகையில் விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை. ஆனால், வைகையாற்றின் வெள்ள உபரிநீரை கிருதுமால் ஆற்றுப் படுகைக்கு திருப்பிவிட விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக கண்டறிந்தால் இது தனியொரு திட்டமாக மேற்கொள்ளப்படும்.

திரு. டி. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வைகை சீரமைப்புத் திட்டம் எப்போது முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார்-வைகை சீரமைப்புத் திட்டம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 41 கோடி ரூபாய் இதற்கு செலவழிக்கப்பட்டு, கடந்த 2, 3 ஆண்டுகளாக நடந்து வருகின்றது. இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகளில் அது முடிவடைய லாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வைகையிலிருந்து வருகின்ற வெள்ளத்தை முதுகுளத்தூர், கடலாடி பகுதிகளுக்குத் திருப்பி விடுவதற்காக, பார்த்திபனூர் ரெகுலேடரிலிருந்து பரலை ஆற்றுக்கும், வீரகனூர் ரெகுலேடரிலிருந்து கிருதமால் நதிக்கும் திட்டங்கள் போடுவதாக அமைச்சர் அவர்கள் விவசாய மானியத்தின்போது

சொன்னார்கள். இந்தத் திட்டங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றின் வெள்ள உபரி நீரை கிருதமால் படுகைக்கு கொண்டுபோய் திருப்பி விடுவதன் மூலமாக ஏறத்தாழ 27,000 ஏக்கர் பாசன வசதி பெறுகின்ற அளவிலே இந்தத் திட்டம் தீட்டப்பட்டு வருகின்றது. இதற்காக ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சீ. செல்வராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, வீரகனூர் அணைத் திட்டத்தில் இருக்கும் துணைக் கால்வாயில், கால்வாய் உடைந்துபோய், பழுதடைந்து தண்ணீர் அதனால் சேதமாகின்றது. அதைத் தடுப்பதற்கு பெரியாறு கால்வாயி லுள்ள துணைக் கால்வாயில் எப்படி சிமெண்ட் ஸ்லாப் போடப் பட்டிருக்கின்றதோ, அதைப்போல் இங்கேயும் சிமெண்ட் ஸ்லாப் போடுவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்லப்படும்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கிருதமால்-வைகை பிரிந்துபோகிற மாணிக்கரை பகுதி தூர்ந்துபோய் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியை வீரகனூர் ரெகுலேட்டருடன் இணைக்கும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுபற்றிய விவரம் இல்லை.

(முற்பகல் 9.40)

திரு. என். லட்சுமிநாராயணன் : கிருதுமாலுக்கு வைகை வெள்ள நீரைத் திருப்பி விட்டால் மட்டும் போதாது. கிருதுமால் தண்ணீரைப் பெறக்கூடிய கண்மாய்களுக்கு ஒழுங்காக நீர் போகக்கூடிய அளவுக்கு கால்வாய் சீர்திருத்தம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தத் திட்டத்தின் மூலம் கிருதுமால் நதிப் பகுதியில் 39 கண்மாய்களும், குண்டாறு பகுதியில் 64 கண்மாய்களும் தண்ணீர் பெற்று அதன் மூலம் அவற்றைச் சார்ந்த 25,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.